Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| Regd. No. TN / CC (S) DN / 119 / 09-11 | Lincensed to Post without prepayment WPP No. TN / CC (S) DN / 51 / 09-11 |
|---|---|

வேணு : 16 ஜூலை 2011 கானம் : 12



Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri.Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.

**Related Websites : www.namadwaar.org**

**Email:contact@namadwaar.org**


ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

Rs.10/-

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

வேணு : 16 ஜூலை 2011 கானம் : 12

Delivered by India Post www.indiapost.gov.in



ஜூன் 11 -
கூடுவாஞ்சேரி
ஸ்ரீஹனுமார் கோவிலில்
சத்சங்கம்



மே 28-30 - சென்னை
திருவான்மியூர் அமரபாரதி கல்யாண மண்டபத்தில்,
கோபகுடீரம் நிகழ்ச்சி



ஜூன் 13 - தூத்துக்குடி
நாமத்வாரில்
கோபகுடீரம் நிகழ்ச்சி



மே 28-30 - சென்னை திருவான்மியூரில் கோபகுடீரம் நிகழ்ச்சி








ஹைதராபாத் ஸ்ரீசாந்தீபனி குருகுல சேவா டிரஸ்ட்
சார்பில் வேதஸாஸ்திர வித்வத் பரீக்ஷா சபா
மே 28-30, 2011





மே 23 அம்பாசமுத்திரம் ஸ்ரீகிருஷ்ணன் கோவிலில் சத்சங்கம்



ஜூன் 12 குடியாத்தம் அருகே களப்பாடி கிராமத்தில் சத்சங்கம்





மே 24 வத்தலகுண்டு நாமத்வாரில்



மே 23 சிவகாசி இண்டஸ்டிரீஸ் சேரிட்டீஸ் கல்யாண மண்டபத்தில் சத்சங்கம்

ஸ்ரீ ஹரி:
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு:16 ஜூலை 2011 கானம்:12

| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர் - 184 | 04 | வேதாந்த மாயை | 13 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 06 | பப்பா ராமதாசர் சொன்ன கதை | 15 |
| பாகவத பழம் -16 | 07 | வேதவித்வத் பரீக்ஷா சபா | 21 |
| மஹானின் தரிசனம் | 23 | மாலே மணிவண்ணா | 31 |
| ப்ருந்தாவன கண்ணன் | 29 | அப்பாலுக்கு அப்பால் | 33 |

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

பாம்பு மகுடிக்குத் தலையாட்டினாலும், பல்லில் விஷம் இருந்து கொண்டுதான் இருக்கும். பாடினாலும், கேட்டாலும், தீயவனிடம் இருக்கும் கெட்ட குணங்கள் விட்டுப் போகுமா? உள்ளத்தை அறிந்து, புறத்தை மறந்தவர்களை, நீ, எனக்கு, காட்டுவாயய்யா, சென்ன மல்லிகார்ஜுனய்யா!

– அக்கமாதேவி

## ஸ்ரீஸ்வாமிஜியின் மீது கீர்த்தனம்

### *நீ உறையும் இடமே ஸ்தலமாமே!*
### *நின் பாத நீரே தீர்த்தமாமே!*

*நின் நாமம் அல்லாது தீனராம் எங்கட்கு*
*மற்றொரு நாமம் உண்டோ?*
*சத்குரு நாமமே துணையாமே, அது அல்லால்*
*அருள் பெற வழியும் உண்டோ? பெரும் துணை எதுவும்*
*உண்டோ?*

*ஆடுவோம்; பாடுவோம் உள்ளோடும்; உணர்வோடும்*
*என்றும் நாடுவோம் நின்னடியை!*
*உன்னருள் வேண்டிடும் பக்தராம் எங்கட்கு*
*வேறொன்று வழியாகுமோ? மற்றொன்று துணையாகுமோ?*

*அடியார்தம் இதயம் தனை கருணையால் சீராக்கி*
*குடிலாய் நித்தம் வாழ்பவனே!*
*என்றும் நினை நாடும் அன்பர்தம் வாழ்விலொரு*
*பயமுமுண்டோ? துயர் வருவதுமுண்டோ?*

*நீ உறையும் இடமே ஸ்தலமாமே!*
*நின் பாத நீரே தீர்த்தமாமே!*
*நின் திருமேனி தரிசனம் கண்டார் தமக்கு - அது*
*திகட்டுமோ? சலிக்குமோ? அலுக்குமோ?*

-ஸ்ரீபாலாஜி ராமச்சந்திரன்

தவறுகள் செய்ய நேரும்பொழுது, தாமஸ குணம் உடையவன், இப்படி என்னை தெய்வம்தான் செய்ய வைத்தது; நான் இதற்கு பொறுப்பு அல்ல என்பான். ராஜஸ குணம் உடையவனோ, தெய்வம் என்னை இதுமாதிரியாக தவறு செய்ய வைத்து விட்டதே என்று வருந்துவான். ஸாத்வீக குணம் உடையவனோ, நான் இதுமாதிரி தவறுகள் இனிமேல் செய்யாமல் இருக்க தெய்வம் அருள வேண்டும் என்று பிரார்த்தனை செய்வான்.

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

The D Studio
www.dexterousinfo.com
Quality is never an accident
It is always the result of intelligent effort
www.vapssky.com
dex gamez
www.dexgamez.com
- Mobile Data Security Systems
- Multimedia Content Exchange
- Mobile Enhancement Utilities
- 3d Multiplayer Games

Roblock
Theft Recovery System for
Blackberry - Windows mobile - Sony Ericsson mobile phones

Roblock provides protection and safety from theft or losing your mobile phones and helps to retrieve it back. Now the users can forget the fear of losing their mobile phones by protecting it using Roblock software.

- SMS notification on SIM Change
- Remote WIPE memory card
- Recover contacts from lost phone
- Complete Stealth operations

contact@dexmobile.com
Ph: +91 960019777

# மதுரமான மஹனீயர் – 184

(டாக்டர். ஆ.பாக்யநாதன்)

சத்சங்கங்களுக்கு சென்று வந்தாலும், மகான்களின் சரித்திரங்களை படிக்கவோ கேட்கவோ நேர்ந்தாலும், நமக்கு நாமும் அத்தகைய புனித வாழ்க்கையை வாழ மாட்டோமா என்று ஆர்வம் எழும். மகான்கள் உண்மையில் எத்தகைய உயர் நிலைகளில் சஞ்சரிக்கின்றனர் என்பது நாம் அறிய முடியாத ஒன்று. எவ்வளவுதான் படித்தாலும் கேட்டாலும் இது புரிந்துகொள்ள முடியாத ஒன்று. அத்தகைய நிலைகளை ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம் பன்முறை பல பக்தர்கள் உணர்ந்திருக்கின்றனர். அப்படிப்பட்ட ஒன்று சமீபத்தில் நடந்தது. ஸ்ரீஸ்வாமிஜியின் பக்தரான ஸ்ரீராமானுஜம், ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருகில் இருக்கையில், ஒரு அதிசயமான திவ்ய காட்சியை தரிசிக்கும் பேறு பெற்றார்.

ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், ஸ்ரீராமானுஜம், ஸ்ரீஹரி மற்றும் ஸ்ரீராமக்ருஷ்ணஹரி ஆகியோரை ஏப்ரல் எட்டாம் தேதியன்று, திருவண்ணாமலையில் உள்ள பகவான் யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமத்திற்கு அழைத்துச் சென்றார். வழி நெடுக, ஸ்ரீ ஸ்வாமிஜி மகான்களை பற்றியும், பக்தர்களை பற்றியும், பேசிக் கொண்டே வந்தார். அப்படி அவர் பேசி வந்ததில், பல சம்பவங்கள், ஸ்ரீ யோகிராம்சுரத்குமார் அவர்கள் வாழ்வில் நடந்தவையே.

ஸ்ரீ ஸ்வாமிஜியின் அன்பும் ஞானமும் கலந்த மொழிகளை பருகி கொண்டே, திருவண்ணாமலை வரை அனைவரும் சென்றனர். திருவண்ணாமலை சென்றடைகையில் மதியமாகி விட்டது. ஸ்ரீஸ்வாமிஜியை பார்த்தவுடன், ஆஸ்ரம பக்தர்களுக்கு எல்லையில்லா மகிழ்ச்சி. எல்லோரும் பிரதான மந்திருக்கு சென்றனர். ஸ்ரீஸ்வாமிஜி சென்றவுடனேயே தியான நிலையில் அமர்ந்தார். வரும் வழி முழுவதும் கூட, அவர் அவ்வப்பொழுது ஆழ்ந்த சிந்தனையில் இருந்து வந்தார். ஆஸ்ரமத்தில் அவர் சற்றும் அசையாமல் அமர்ந்திருக்கையில், அவரை சுற்றி ஒரு ஆழ்ந்த அமைதி பரவுவதை அனைவரும் உணர்ந்தனர். அவருக்கு இடது பக்கம் அமர்ந்திருந்த ஸ்ரீராமானுஜம், அவ்வப்பொழுது

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருமுகத்தை பார்த்து கொண்டிருந்தார். அவரது திருமுகத்தை பார்ப்பதினாலேயே அனைவரின் மனமும் அமைதியுறுவதை அன்பர்கள் உணர்ந்தனர். இப்படி ஒரு முக்கால் மணி நேரம் விரைவாகக் கழிந்தது. அதன் பின்னர்தான், ராமானுஜம் அவர்களுக்கு ஒரு திவ்ய காட்சி தென்பட்டது . ஸ்ரீஸ்வாமிஜி கண்களை மெல்ல திறந்தார். அவர் கண்களில் ஒரு ஒளி வட்டம்! கண்ணின் மணிகளை சுற்றி பளிச்சென்று ஒரு பிரகாசம். இதை பார்க்கையில், ஸ்ரீராமானுஜம் உள்ளம் பூரித்தது. உடல் முழுவதும் ஆனந்தம் பரவியது. மிக அருகில் இருந்ததால், இவை அனைத்தையும் ராமானுஜம் அவர்களால் மிக தெளிவாக பார்க்க முடிந்தது. இந்த ஒளி வட்டம் ஸ்ரீஸ்வாமிஜி அமர்ந்திருக்கும் வரை மறையவே இல்லை.

"தியானத்தில் கண்கள் ஒளிரும்" என்று ஸ்ரீ ஸ்வாமிஜி அடிக்கடி சொல்வார். அது மகான்களின் மகிமையை உணரும் பொருட்டு சொல்லப்பட்ட ஒரு கவி நயம் பொருந்திய அடைமொழி என்றே பலரும் நினைக்கலாம். இப்படி கூறுவது உபசாரத்திற்குச் சொல்லப்பட்ட வார்த்தையல்ல; அனைத்துமே சத்தியமான வார்த்தைகள் என்பதை சத்குருநாதரின் கருணை உணர்த்தி விட்டது போலும்.

சென்னை திரும்பி வருகையில் இந்த திவ்ய அனுபவத்தை சக குருபக்தர்களான ஹரி மற்றும் ராமக்ருஷ்ணஹரியிடம் பகிர்ந்து கொண்டார் ராமானுஜம். அவர்களுக்கும் ஒரே பூரிப்பு! அனைவரும் அவர்களது பாக்கியத்தை எண்ணி எண்ணி மகிழ்ந்தனர்.

மேற்கண்ட அனுபவத்தை ஸ்ரீராமனுஜம் அவர்கள் சொன்னபொழுது, நான் அடைந்த ஆச்சரியம் கலந்த ஆனந்தத்தை தாங்களும் அடைய வேண்டி, அதை அப்படியே உங்களிடம் பகிர்ந்து கொண்டேன்.

பிறரை வணங்க நேரிடும்பொழுது, அவர்களுக்குப் பெருமை சேர்ந்து விடுமே என்பதை விட, நமக்கு பணிவு வளரும். அதனால், கிருஷ்ணன் மகிழ்வான் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: வைராக்கியம் தீவிரமாக ஆகவே மாட்டேன் என்கின்றது. அதற்கு ஒரு வழி சொல்லுங்களேன்.

பதில்: உன்னுடைய சொந்த வாழ்க்கையில், தவிர்க்கவே முடியாமல் நடந்த ஒரு துயரமான சம்பவத்தையும், பிறருடைய வாழ்க்கையில் நடந்த துயரங்களில் எது உன்னை மனதளவில் பாதித்ததோ இதை இரண்டையும் அடிக்கடி சிந்தனை செய்து வா.

கேள்வி: மஹான்களை நாம் எப்படி புரிந்து கொள்வது?

பதில்: அவரை நீ என்னவெல்லாம் புரிந்து கொண்டிருப்பதாக நினைத்து கொண்டிருக்கின்றாயோ, அது அவரல்ல, என்பதுதான் அவரை உண்மையாக புரிந்து கொண்டது ஆகும்.

நல்ல ஆடை, ஆபரணங்கள் சரீரத்திற்கு அழகு என்பார்கள் சிலர்; வாசனாதி திரவியங்கள் சரீரத்திற்கு அழகு என்பார்கள் சிலர்; நல்ல உணவு சரீரத்திற்கு ஆரோக்யம் என்பார்கள் சிலர்; சரீரத்தை சுத்தமாக வைத்துக் கொள்வதுதான் சரீரத்திற்கு அழகு என்பார்கள் சிலர்; மேற்படி எல்லாம் இருந்தாலும் சைதன்யம் இல்லாவிட்டால் ஒரு பலனும் இல்லை.

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி



# பாகவத பழம் (16)

**பாகம் 2 – அத் 5**

– ஸ்ரீஸ்வாமிஜி

இப்படி மனக்கிலேசத்துடன் வியாஸர் அமர்ந்திருந்தபொழுது, நாரத மஹரிஷி தற்செயலாக "நாராயண" நாம கீர்த்தனம் செய்துகொண்டே அங்கு வந்தார். வியாஸரே ஸ்வயம் பகவானாக இருந்தபோதிலும், தன்னுடைய ஆஸ்ரமம் தேடி வந்த நாரதரை வரவேற்று, அமர்த்தி விதிப்படி அவரை பூஜையும் செய்தார்.

**அத்தியாயம் 5**

அப்படி தெய்வச் செயலாக வந்து சேர்ந்த நாரதர் சுகமாக அமர்ந்து கொண்டார். அப்படி அமர்ந்துகொண்டவுடன், தன் அருகில் கவலையுடன் அமர்ந்திருக்கும் வியாஸ பகவானைப் பார்த்து, இலேசாக புன்முறுவல் பூத்தபடியே பேசலானார்: பாராசார்ய மஹாபாக' என்று வ்யாஸரை அழைக்கிறார்.

அவர் செய்த பாக்யம் என்னவென்றால் பகவான் அவரை பாகவதம் இயற்றுவதற்காக தேர்ந்தெடுத்ததே. "வியாஸரே, தாங்கள் ஏன் சற்று வாட்டமாகக் காணப்படுகிறீர்? ஒருவருடைய வாட்டத்திற்கு இண்டு காரணங்கள்தான் பெரும்பாலும் இருக்கக்கூடும். ஒன்று சரீரத்திற்கு ஏற்படக்கூடிய வியாதிகள்; மற்றொன்று, மனதிற்கு ஏற்படக்கூடிய வியாதிகள். இன்னும் சொல்லப் போனால், சரீரத்திற்கு ஏற்படும் குறைபாடுகளுக்குத்தான் வியாதி என்று பெயர். மனதிற்கு ஏற்படும் துக்கங்களுக்கு (Emotional Injury) 'ஆதி' என்று பெயர். தாங்களோ வேதத்தை நன்கு அறிந்ததோடு மட்டும் அல்லாமல், அதன் பொருளையும் உணர்ந்துள்ளீர்கள். மேலும் ஒரு லக்ஷம் சுலோகங்கள் கொண்ட, மிகவும் ஆச்சர்யமான மஹாபாரதம் என்ற இதிகாசத்தை இவ்வுலகிற்கு அனுக்கிரஹம் செய்துள்ளீர்கள். மேலும்,வேதம், பிரும்மஸூத்ரம், உபநிடதங்கள் போன்றவற்றையெல்லாம் உலகத்திற்கு அனுக்கிரஹம் செய்துவிட்டீர்கள். அப்படி இருந்தும்,

ஏதோ செய்யவேண்டிய ஒன்றைச் செய்யாதது போன்று வாட்டமாக இருக்கின்றீரே! அதற்கான காரணத்தை நான் தெரிந்துகொள்ளலாமா?'' என்று உரிமையுடனும் நாகரீகமாகவும் கேட்டார்.

வியாஸரும் இப்படிப்பட்ட ஒருவரைத்தானே எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஏன் என்றால், நாம் நம்முடைய துக்கத்தை மற்றொருவரிடம் சொன்னால், அதற்கு ஒரு தீர்வு ஏற்படவேண்டும். அப்படி இல்லாவிட்டாலும்கூட பரவாயில்லை, அதனை சரியான கோணத்தில் புரிந்துகொள்ளும் பக்குவமாவது வேண்டும். இப்படி நாரதர் கேட்டவுடன் வியாஸரும் அதே உரிமையுடன் பேசலானார். "தாங்களே சிருஷ்டி கர்த்தாவான பிரும்மாவின் புதல்வர். எப்பொழுது தங்களால் நான் ஒரு ஆழ்ந்த கவலையால் பீடிக்கப்பட்டுள்ளேன் என்று கண்டுபிடிக்க முடிந்ததோ, தாங்களே அந்தக் கவலைக்கான மூலத்தையும், அதன் நிவர்த்திக்கான வழியையும் கண்டுபிடித்துச் சொல்லுங்கள். உங்களால் முடியும். ஏன் என்றால், நீங்கள் என்ன சாதாரண தேவதையையா உபாசிக்கின்றீர்கள்? புராண புருஷனான நாராயணனை அல்லவோ உபாசிக்கின்றீர்கள். அந்த நாராயணன் அல்லவோ, இந்த உலகத்தைத் தன்னுடைய சங்கல்ப மாத்திரத்தில் சிருஷ்டி செய்தும் அதை பத்திரமாகக் காப்பாற்றியும் முடிவில் தன்னிடமே ஒடுக்கிக்கொள்ளவும் போகின்றார். அதோடு மட்டும் அல்லாமல், தாங்கள் சூரியன் போன்று மூன்று உலகங்களிலும் சஞ்சரிக்கின்றீர்கள். காற்று எப்படி எல்லா ஜீவராசிகளின் மனது வரை உள்ளே புகுந்து புறப்பட்டு வருகின்றதோ, அதுபோல்தான் நீங்களும். மேலும், தாங்களோ பரபிரும்மம். வேதம், யோகாப்யாஸம், தன்னுடைய தர்மத்தை அனுசரித்து செய்யக்கூடிய விதங்கள் எல்லாவற்றிலும் கரைகண்டவர். ஆகவே, நீங்களே இதற்கு பதில் கூறுங்கள்'' என்றார். நாரதரும், வியாஸர் சொன்னதையெல்லாம் கேட்டு பின்வருமாறு பேசலானார். வியாஸரே, தாங்கள் தர்மம், அர்த்தம், காமம் போன்றவற்றிற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து, பல

சாஸ்திரங்களை எழுதினீர்களோ, அந்த அளவிற்கு வாஸுதேவனுடைய மகிமைகளைக் கூறவில்லை என்று தான் நான் நினைக்கின்றேன்.

*தாங்கள் இயற்றும் இந்த க்ரந்தத்தில் ஒவ்வொரு ஸ்லோகத்திலும், பகவானின் நாமா இருக்கவேண்டும். இதனாலேயே தப்பும் தவறுமாக படித்த போதிலும், இந்த நாமங்களை சொல்வதனால் பாவங்கள் எல்லாம் அழிந்துவிடும். இதுதான் மஹான்களுக்கும் சம்மதமாக இருக்கும். அதோடு மட்டுமல்லாமல், சரியாக உச்சரித்தால் என்ன பலன் கிடைக்குமோ, அது கிடைத்தே ஆகவேண்டும்.*

நீங்கள், வேதத்தில் நாராயணனுடைய பெருமையை சொல்லக்கூடிய புருஷஸூக்தம், நாராயண ஸூக்தம் மற்றும் எவ்வளவோ சொல்லி யிருக்கலாம். அவைகளில் கடினமான சொற்களும் கம்பீரமாகவே கையாளப்பட்டிருக்கின்றன. மேலும், அவற்றைச் சிறிது தவறாகச் சொன்னாலும், விபரீதமான பலன்களையே கொடுக்கும். அப்படியிருக்க, எல்லோரும் எப்படி அதைச் சொல்வதற்குத் துணிவார்கள்?

வாஸுதேவனுடைய மஹிமைகள், மேலும் அதிக அளவில் வர்ணிக்கப்படவேண்டும். அழகாக அப்படி வர்ணிக்கக்கூடிய பதங்கள், லலிதமாகவும் இனிமையாகவும் எளிமையாகவும், எல்லோராலும் ஆசையுடன் சொல்லக்கூடியதாகவும் இருக்கவேண்டும். ஒருவர் அதை தப்பும் தவறுமாக உச்சரித்தாலும்கூட, அவருக்கு விபரீத பலன்கள் உண்டாகக்கூடாது. மேலும், தாங்கள் இயற்றும் இந்த க்ரந்தத்தில் ஒவ்வொரு ஸ்லோகத்திலும், பகவானின் நாமா இருக்கவேண்டும். இதனாலேயே தப்பும் தவறுமாக படித்த போதிலும், இந்த நாமங்களை சொல்வதனால் பாவங்கள் எல்லாம் அழிந்துவிடும். இதுதான் மஹான்களுக்கும் சம்மதமாக இருக்கும். அதோடு மட்டுமல்லாமல், சரியாக உச்சரித்தால் என்ன பலன் கிடைக்குமோ, அது கிடைத்தே

ஆகவேண்டும். ஏன் என்றால், பிரும்மாவின் சிருஷ்டியில் 84 லக்ஷம் ஜீவராசிகள் உள்ளன. அவற்றுள் மனிதனால் மட்டுமே பேச முடியும்.

ஒருவன் தன் நாக்கில் காப்பி, தேநீர், வடை, போண்டா, தோசை, இட்லி இப்படி விதவிதமான சாப்பாடு, இனிப்புகள், தாம்பூலம் என்று சுவைக்கின்றான். ஆனால், அவன் மறந்தும் இறைவனுடைய நாமத்தைச் சொல்லவில்லை என்றால், அவனுடைய வாய் ஓர் எச்சில் தொட்டிக்குத்தான் சமம். கல்யாண மண்டபத்தின் வாசலில் இருக்கக்கூடிய தொட்டியில், சாப்பிட்டு முடித்த எவ்வளவோ எச்சில் இலைகள் விழும். அந்த இலைகளில் மீதம் உள்ள எவ்வளவோ பதார்த்தங்கள் இருக்கும். ஆனால், அந்தத் தொட்டியால் இறைவனுடைய நாமங்களைச் சொல்லமுடியுமா? அதுபோல்தான் இறைவனுடைய நாமத்தைச் சொல்லாத வாயும்.

ஸாதுக்கள் என்பவர்கள் யார்? யாராவது இறைவனைப்பற்றி கேட்க ஆசைப்பட்டால், அவர்களுக்கு நேரம் போவது தெரியாமல், பகவானுடைய மஹிமைகளை எடுத்துச் சொல்லிக்கொண்டே இருப்பார்கள்; அல்லது யாராவது பகவானைப்பற்றிச் சொன்னால், கேட்டுக் கொண்டே இருப்பார்கள். இது இரண்டும் இல்லாத பொழுது, தனக்குத் தானே இறைவனைப்பற்றி பேசிக் கொண்டும்,

இன்றைய நவீன காலகட்டத்திலும், பெண் குழந்தை பிறந்தால் அதற்காகப் பெற்றோர்கள் வருந்துவது வருத்தம் அளிக்கக்கூடியதாக உள்ளது. சில பெற்றோர்கள் பெண்குழந்தைகளும் ஆண்குழந்தைகளும் இருந்தால், ஆண் குழந்தைகளுக்கு பெண்குழந்தையைக்காட்டிலும் அதிக பாசமும் அன்பும் காட்டி வளர்ப்பதும் வருத்தம் அளிப்பதாக உள்ளது.

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

பாடிக்கொண்டும் இருப்பார்கள். இந்த மூன்றையும் தவிர வேறு ஒரு காரியமும் அறியாதவர்கள்தான் ஸாதுக்கள். அத்தகைய ஸாதுக்கள் இருப்பதே ஜகத்தைப் பவித்திரமாக்குகின்றது. ஏற்கெனவே மனிதர்கள், பலவிதமான ஆசைகளால் பீடிக்கப்பட்டுத் திண்டாடுகிறார்கள். அவர்களால் அவைகளை அடக்கமுடியவில்லை. நீங்கள் வேறு, இந்த யாகம் செய், குழந்தை பிறக்கும்; இந்த யாகம் செய், ஸ்வர்க்கம் கிடைக்கும்; இந்த யாகம் செய், எதிரியை அழிக்கலாம்; இந்த யாகம் செய், பணம் வரும் என்று கூறி, மேலும் அவர்களது ஆசையை அதிகரிக்கச் செய்கின்றீர்கள். வாஸுதேவனிடம் பக்தி இல்லாதவர்களுடைய ஞானம் சோபிப்பதில்லை. ஒருவன் வாஸுதேவனிடம் பக்தியில்லாமல், எவ்வளவுதான் தர்மத்தை அனுஷ்டித்தாலும் அது ஒரு பலனையும் தருவதில்லை. அதேசமயத்தில், வாஸுதேவனை பஜிக்கும் ஒருவன் தன் தர்மத்திலிருந்து வழுவி, அஜாமிளன், கனிகை, க்ஷத்ரபந்து போன்று, பக்தன் ஆனாலும், மூன்று உலகங்களிலும் அவனுக்கு நாசம் என்பதே ஏற்படுவதில்லை. வாஸுதேவனுடைய கதைகளை ஒருவன் அடிக்கடி சொல்லவேண்டும். அப்படி ஒருவனுக்கு சொல்ல வேண்டும் என்று ஆசை வந்தால், அதுதான் அவன் செய்த தவத்தின் பலன், செய்த தானத்தின் பலன், வேதம் படித்ததன் பலன், ஞானத்திற்கான பலன், யாகத்திற்கு பலன் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

உலகத்தில் பல ரிஷிகள் இருக்கிறார்கள். பூமியில் பாதம் படாதபடியே வாழ்ந்து தவம் இயற்றி ரிஷிகள் ஆனவர்களும் உண்டு. வெறும் காய், கிழங்கு, தழைகளையே உண்டு தவம் இயற்றியவர்களும் உண்டு. மத்யானம் உச்சிவெயிலில் கொதிக்கும் ஆற்றின் மணலில் அமர்ந்து, நான்குபுறமும் அக்னியை மூட்டிக்கொண்டு பஞ்சாக்னி மத்தியில் தவம் செய்பவர்களும் உண்டு. நானோ, அழகான மயில்கண் வேஷ்டி, சுகந்தமான மாலை என்றும் ஸுக ஜீவியாக இருந்துகொண்டே, நாரத மஹரிஷி என்று பெயர் வாங்கிவிட்டேன். அதற்குக் காரணம் நாராயண நாமத்தின் பெருமையேயாகும்.

முற்பிறவியில் என் தாயார், வேதத்தைப் படித்தும், அதன் சாரமான ஹரிகீர்த்தனம் செய்தும், வாழ்ந்து வந்தவர்களின் வீடுகளில் குற்றேவல் செய்து வந்தாள். பாவம், அவளோ இளம் விதவை. எனக்கு அப்பொழுது வயது ஐந்துதான். அவர்களுடைய வீடுகளைப் பெருக்கி, மெழுகி, பாத்திரங்களைத் தேய்த்து, அதனால் கிடைக்கக்கூடியதை வைத்துக்கொண்டு என்னையும் காப்பாற்றி வந்தாள்.

ஒருசமயம், சாதுர்மாஸ்ய காலம் வந்தது. சாதுர்மாஸ்யம் என்றால் என்ன? ஒரு வருடத்திற்கு இரண்டு அயனங்கள். அயனம் என்றால் வழி. சூரியன் தெற்குப் பக்கமாக நகரும்பொழுது தக்ஷிணாயனம். சூரியன் வடக்கே நகரும்பொழுது உத்தராயனம். நம்முடைய ஒரு வருஷம் தேவர்களுடைய ஒருநாள். உத்தராயனம் அவர்களுடைய பகல்பொழுது. தக்ஷிணாயனம் அவர்களுடைய இரவுப்பொழுது. நம்முடைய ஒரு மாதம் அவர்களுடைய இரண்டு மணிநேரம். அதில், ஆடி மாதத்திலிருந்து அவர்களுடைய இரவுப்பொழுது ஆரம்பம். அக்ஞானத்தில் இருக்கும் ஜீவன்களான நாம் இரவை தூக்கத்தில் கழிப்போம். தூக்கம், மூப்பு, பசி, தாகம், வியாதி, மரணம் இவைகள் இல்லாத தேவர்கள் என்ன செய்வார்கள்? யோக நித்திரையில் இருப்பார்கள். பூவுலகத்திலும் யோகீஸ்வரர்கள் இருப்பது யோக நித்திரையில்தான். அப்படி தேவர்கள் யோகத்தில் இருக்கும்பொழுது, ஜீவன்களும் யோகத்திலிருந்து, அதாவது இறைவனை அடைவதற்கு, அவரவர்கள் பின்பற்றக்கூடிய உபாசனைகளை செய்வது நல்ல பலனைத் தருமாம்.

(கனியும்)

முன் அட்டை: பண்டரிபுரம் சந்திரபாகா நதியில் ஸ்ரீஸ்வாமிஜி
பின் அட்டை: மதுரபுரி ஆஸ்ரமத்தில் காஞ்சி மஹாஸ்வாமிகள் ஜெயந்தியின்பொழுது ஜூன் 14, 2011

# வேதாந்த மாயை

– ஸ்ரீஸ்வாமிஜி

நாம் எங்காவது வேதாந்த உபன்யாசங்களை கேட்க நேர்ந்தாலோ, அல்லது படிக்க நேர்ந்தாலோ மனதில் ஒரு எண்ணம் அடிக்கடி தோன்றும்; அதாவது நாம் அழியாத ஆத்மா என்று. அது மட்டும் அல்லாது உலகமே பொய் என்றும், அது மட்டும் அல்லாது கடவுள்கள் எல்லாம் மனதின் கற்பனை என்றும் தோன்றும்.

இதெல்லாம் கூட பரவாயில்லை; இந்த ஆத்ம சாக்ஷாத்காரத்தை ஏதோ வெகு சீக்கிரத்தில் அடைந்து விடலாம் என்றும் தோன்றும். இல்லை; அதற்கு நாம் தகுதி இல்லை என்று யாராவது சொன்னாலோ, உனக்கு அவர் சொல்வது மட்டும் இல்லை, அவரையும் சேர்த்து பிடிக்காமல் போய் விடும்.

நாம் செய்கின்ற தவறு நமக்கு பிடித்திருந்தால், அதையும் நியாயம் என்று வாதித்து நம்மை convince செய்வதுதான், மனதின் முக்கியமான வேலை ஆகும். ஆத்மா, அத்வைதம் எல்லாம் உயர்ந்ததுதான். அதை விட உயர்ந்த விஷயம் என்ன என்றால் நம்முடைய இன்றைய நிலையை உண்மையில் சீர் தூக்கி பார்த்து உணர்ந்து கொள்வது. அது அடைய வேண்டியதுதான். இரண்டாவது கருத்துக்கே இடமில்லை. அது நீண்ட பயணம். அதை, நீ நினைக்கின்ற மாதிரி எல்லாம் நாளையே அடைந்து விட முடியாது. PreKG யில் இருந்து படிப்பை ஆரம்பித்துதான் PHDக்கு போக வேண்டும். அதை மனதில் நன்றாக நிறுத்தி கொண்டு, வேதாந்தத்தை கேள்; படி:

வேதாந்தத்தை கேட்டு விட்டால், படித்து விட்டால், ஏதோ தான் அதற்கு தகுதியான நிலையில் இருப்பதாக பிரமை தட்டும். அதில் அகப்பட்டுக்கொண்டு மோசம் போய் விடாதே. பணம், புகழ், காமம், சுற்றம், வீடு, வாசல் எல்லாவற்றையும் துறந்தும், அவனுக்கு தன்னுடைய சரீரத்தில் கடுகளவு அபிமானம் இருக்குமானாலும், ஞானம் கைகூடவே கூடாது. வீணாக வேதாந்த பிராந்தியிலே ஏமாந்து நாமகீர்த்தனம் செய்யாமல் விட்டு விடாதே.

வேதாந்தத்தை எந்த அளவிற்கு சரியாக தெரிந்து கொள்கின்றாயோ, அந்த அளவிற்கு அதற்கு என்ன தகுதி வேண்டும் என்பதை பல முறை கேட்டுத் தெரிந்து கொள். அந்த பலமுறை கேட்டு கேட்டு தெரிந்து கொண்ட பிறகு, நமக்கு அந்த தகுதிகளில் என்னென்ன தகுதிகள் இருக்கின்றது என்பதை நீ வணங்கும் தெய்வம் முன்பாக, கற்பூரம் அடித்து சத்தியம் செய்து ஏற்றுக்கொள். வீணாக வேதாந்த கற்பனையில் நாமகீர்த்தனம் செய்யாமல் விட்டு விடாதே.

*வேதாந்தத்தை கேட்டு விட்டால், படித்து விட்டால், ஏதோ தான் அதற்கு தகுதியான நிலையில் இருப்பதாக பிரமை தட்டும். அதில் அகப்பட்டுக்கொண்டு மோசம் போய் விடாதே.*

Ultramodernஆக வாழ்ந்து கொண்டு, நாகரீகம் என்ற பெயரில் அநாகரீகமாக தன்னை பலவிதத்திலும் அலங்கரித்துக் கொண்டு " I don't want anything lesser (than) to Vedhantha" என்று சொல்பவர்களை நினைத்து அழுவதா அல்லது சிரிப்பதா? நீ உன்னை ஆகாயத்தில் நிற்பதாக கற்பனை செய்து கொள். கீழே உள்ள மக்களின் வாழ்க்கை முறை ஓட்டம், ஆட்டம், பாட்டம், குணாதிசயங்கள் எல்லாவற்றையும் கண்களைத் திறந்து பார். இமயம் முதல் குமரி வரை நகர்ந்து கொண்டே பார். இவர்களுக்கு மிகவும் ஆசாரத்தை உடைய, கடினமாக அனுஷ்டிக்க கூடிய கர்மாதான் சரியான மார்க்கம் என்று சொல்ல முடியுமா? அல்லது இரவு பகலாக பகவானுக்காக அழக்கூடிய பக்திதான் வழி என்று சொல்ல முடியுமா? அல்லது சரீராபிமானமே கூடாது என்ற ஞானத்தைத்தான் சொல்ல முடியுமா?

பகவானின் கருணையை அடிப்படையாகக் கொண்ட, எந்த விதிகளும் இல்லாத, கலியின் வேகத்தை போக்கக்கூடிய, நாமகீர்த்தனம் ஒன்றுதான் கதி என்பதை திரும்ப திரும்ப எனக்கு நானே சிந்தித்து பார்த்து கொள்கின்றேன்.

# பப்பா ராமதாசர் சொன்ன கதை

ஒரு பக்தர் பப்பா ராமதாசரை தரிசனம் செய்ய வந்திருந்தார். வந்த பக்தர் பப்பா ராமதாசரை பார்த்து, தனக்கு ஏதாவது உபதேசம் செய்யும்படி பிரார்த்தித்தார். ராமதாசர் அவரை சதா ராம நாமம் சொல்லி வர சொன்னார். வந்த பக்தரோ, "நான் தினமும் சொல்லிக்கொண்டிருக்கின்றேன். ஒரே நாமாவை சொல்லுவதால் அலுப்பு தட்டுகின்றது. மேலும் வேதாந்தமோ மனமே அழியவேண்டும் என்று சொல்லுகின்றது. சதா நாமம் சொல்லிக் கொண்டிருப்பதால் மனம் எப்படி அழியும்" என்று சொன்னார். அதற்கு பதிலாக, பப்பா ராமதாசர் ஒரு கதை சொல்லலானார்.

ஒரு ஊரில் ஒருவன் இருந்து வந்தான். அவன் சிறிய வேலை செய்வதற்கு கூட அழுவான். நமக்கு பதிலாக வேறு ஒருவர் இந்த வேலைகளை எல்லாம் செய்தால் நன்றாக இருக்குமே என்று நினைத்தான். ஒரு நாள் அவனுடைய கனவில் பூதம் ஒன்று வந்தது. அந்த பூதம் அவனை பார்த்து, "உனக்கு வேலை செய்வதற்கு சோம்பேறித்தனமாக உள்ளது. ஆனால் எனக்கோ ஏதாவது வேலை செய்து கொண்டே இருக்க வேண்டும். ஆகவே நாளை முதல் உன் முன்னால் வருவேன். நீ என்ன வேலை சொன்னாலும் யோசிக்காமல் செய்வேன். ஆனால் ஒன்று! எனக்கு ஏதாவது வேலை கொடுத்து கொண்டே இருக்க வேண்டும். அப்படி ஏதாவது வேலை கொடுக்கவில்லை என்றால், உன்னை அடித்து சாப்பிட்டு விடுவேன்" என்றது. நம்முடைய ஆளுக்கோ ஒரே சந்தோஷம். நாம் இனி வேலை செய்ய வேண்டாம்; சுகமாக இருக்கலாம் என்று நினைத்தான்.

சொன்னது போலவே மறுநாள் பூதம் அவர் முன்பாக வந்து விட்டது. அவர், ஒவ்வொரு வேலையாக செய்ய சொல்லி கட்டளை இட்டார். எல்லாம் பெரிய பெரிய வேலைகள். ஆனால், அந்த பூதமோ, அவற்றை எல்லாம் நொடியில் செய்து முடித்து விடும். அடுத்தது என்ன அடுத்தது என்ன என்று வந்து கேட்கும்.

பூதம் வந்த உடனே மிகவும் மகிழ்ச்சி அடைந்த நம்மவர், இப்பொழுது கவலை அடைந்தார். அந்த பூதத்தின் வேகத்தை பார்த்து கவலை அடைந்த நம்மவருக்கு, இப்பொழுது பயம் அதிகமாகி விட்டது.

"எங்காவது இந்த பூதம் நம்மை அடித்து தின்று விடப் போகின்றதே" என்று அதற்கு ஒரு தந்திரம் செய்தார்.

வீட்டின் முன்பாக, இருபது அடி உயரம் உள்ள ஒரு கம்பத்தை நட்டார். பூதத்தை அந்த கம்பத்தின் மீது ஏற வேண்டும்; பின்பு இறங்க வேண்டும் என்றார். அந்த பூதமும் அப்படியே செய்ய ஆரம்பித்தது. "நான் சொல்லும் வரை செய்து கொண்டே இரு" என்று கூறி விட்டு போய் விட்டார் நம்மவர். அந்த பூதம் பலமுறைகள் செய்தது. கொஞ்சம் கொஞ்சமாக அதற்கு அலுத்து விட்டது. "சரியான ஆளிடம் மாட்டிக்கொண்டோம். இவன் நம்மை ஒரு வழி செய்து விடுவான் போலிருக்கின்றது" என்று அந்த பூதம், நம்மவருக்கு தெரியாமல் அவரை விட்டு ஒரே ஓட்டமாக ஓடி விட்டது. அதுபோல்தான் நாமா சொல்வதற்கு ஒரே அலுப்பாக இருந்தாலும், சொல்லிக்கொண்டே இரு. அலுத்து போன மனது சரியான ஆசாமியிடம் மாட்டிக்கொண்டோம் என்று ஒருநாள் சொல்லி கொள்ளாமல், ஒரே ஓட்டமாய் ஓடி காணாமல் போய் விடும் என்றார்.

SRI HARI:

PRANAMS TO THE LOTUS FEET OF HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI

Buddies
Infotech Pvt Ltd

OUR SOLUTIONS

- WEB DEVELOPMENT
- WEB MARKETING
- SOFTWARE DEVELOPMENT
- MOBILE SOLUTIONS

Buddies Infotech Pvt Ltd
KG Marina Bay,No.75 & 77, Ground Floor,
Santhome High Road,Santhome,
Chennai 600 004
Phone: +91-44-43033313
E-mail: contact@buddiesinfotech.com

*ஹைதராபாத் ஸ்ரீசாந்தீபனி குருகுல சேவா டிரஸ்ட் சார்பில்*
*வேதஸாஸ்திர வித்வத் பரீக்ஷா சபா*

*-ஸ்ரீமதி லதாரவிச்சந்திரன்*

நமது சத்குருநாதர் மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி அவர்களின் பரிபூரண அருளாசிகளுடன், ஹைதராபாத் சாந்தீபனி குருகுல சேவா டிரஸ்ட் சார்பில், ஸ்ரீமத் அகில பாரத கிருஷ்ணாதீர விஜயசங்கர வேத வித்வத் பரீக்ஷா சபா, மே மாதம் 29,30,31 தேதிகளில் ஹைதராபாத் நகரில் மிக அழகாக நடந்து முடிந்தது. வேத வித்வான்களும், ஸாஸ்திர பண்டிதர்களும், நித்ய அக்னிஹோத்ரிகளும், பெரிய யாகங்களை செய்தவர்களும் குழுமி இருந்த இவ்வைபவத்தில், பங்கேற்ற அனைவரும் மிகவும் பாக்கியவான்கள்.



முதல் தினத்தன்று ஸ்ரீமணித்ராவிட் சாஸ்திரிகள் உபன்யாசம் செய்த பிரும்ம சூத்ர பாஷ்யத்தை தெலுங்கில் ஸ்ரீ தோர்பல பிரபாகர சர்மா மொழிபெயர்த்தார். அதன் பின்னர் வித்யார்த்திகளுக்கு பரீக்ஷை நடைபெற்றது. இவ்வைபவத்தை நாளேடுகளும் தொலைக்காட்சியினரும், பிரசுரிக்கவும் ஒளிபரப்பவும் செய்தன. இரண்டாம் நாள் ஸ்ரீமணித்ராவிட் ஸாஸ்திரிகளின் மாணாக்கரான ஸ்ரீகுப்ப விஸ்வநாத சாஸ்திரிகள், தெலுங்கில் அழகாக உபநிடதங்கள் குறித்து உபன்யாசம் செய்தார். அதன் பின் வேதபாராயணம் விமரிசையாக நடைபெற்றது. மாலை ஸ்ரீப்ரபாகர சர்மா அவர்கள், வேத மகிமை குறித்து உபன்யாசம் செய்தார். மூன்றாம் நாளன்று ஸ்ரீவிஸ்வநாத சர்மா பகவத் கீதை குறித்து உபன்யாசம் செய்தார். மதியம் தினமும் பாண்டித்ய பிரகர்ஷனையும், இரவு ஸ்வஸ்தி வசனமும் நடைபெற்றது. முதல் நாள் மாலை ராமாயணத்திலிருந்தும், இரண்டாம் நாள் மஹாபாரதத்திலிருந்தும், மூன்றாம் நாள் ஸ்ரீமத் பாகவதத்திலிருந்தும் வேத தர்மங்களை ஸஹஸ்ராவதானி ஸ்ரீகரிகிபாடி நரசிம்மராவ் உபன்யாசம் செய்தார். அவர்

தனது உபன்யாசங்களின் முடிவில், வேதவ்யாசர் ராம,கிருஷ்ண நாம உச்சாரணங்களையே கலியுகத்திற்கு பிரத்யேக மருந்தாக தந்துள்ளார் என்றும், பகவன் நாமம் ஒவ்வொருவர் நாவிலும் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

வேதமாதாவின் பூரண அனுக்ரஹத்தினால் மூன்று நாட்களும் பந்தலில் சாந்தம் தவழ்ந்தோடியது. அனைத்து வேத பண்டிதர்களும் தக்கபடி கௌரவிக்கப்பட்டனர். வேதமாதாவின் பிரதிநிதிகளான வேத பண்டிதர்களை ஆதரிப்பதும், வேதபாடசாலைகளை நடத்துவதும்தான் வேதமாதாவிற்கான சரியான ரக்ஷணை. இதையே ஸ்ரீகாஞ்சி மஹாஸ்வாமிகளும், நமது ஸ்ரீஸ்வாமிஜியும் வலியுறுத்தி வந்துள்ளனர் என்பது இவ்விழாவின் முடிவில் நன்கு புரிந்தது. இவ்விழாவிற்கு மொத்தமாக சுமார் 1000 அன்பர்கள் வந்து, வேதமாதாவின் அனுக்ரஹம் பெற்றனர்.

OUR HUMBLE PRANAMS TO SRI SWAMIJI

**WE HANDLE ALL TRAVEL RELATED SERVICES**

1. DOMESTIC INTERNATIONAL AIR TICKETING
2. VISAS / PASSPORT
3. INSURANCE
4. FOREIGN EXCHANGE
5. HOTEL RESERVATION & RENT A CAR SERVICES
6. OUTBOUND & INBOUND TOUR PACKAGE

**PL CONTACT**

**EURO WORLD TRAVEL PVT. LTD**

26, FIRST FLOOR, C.P.RAMASWAMY ROAD, ALWARPET, CHENNAI - 600018.
Ph - 9382846979 Ph- 24661228/29, 24671228/29, 24993609/4629
Email - eurotravel@vsnl.net/euroworldtravel@gmail.com

# பாலகர்களுக்கு ஒரு கதை



## சிறப்பு தரிசனம்

ஒரு ஊரில் தனஞ்செயன், என்ற ஒரு செல்வந்தன் இருந்து வந்தான். செல்வ செழிப்பால், அவன் தனக்கு நிகர் யார் என்ற இறுமாப்புடன் வாழ்ந்து வந்தான். யாரையும் மதிக்க மாட்டான். அவ்வளவு மதம். ஒருவருக்கும் உதவி செய்ய மாட்டான். ஒருவருக்கும் ஒரு இன்சொல் சொல்ல மாட்டான். அவன் தன்னுடைய செல்வத்தை கொண்டு, ஒரு நல்ல செயல் கூட செய்தது கிடையாது. நல்லது செய்யாதது மட்டுமல்லாமல், பிறருக்கு எவ்வளவு தீமையும் இடையூறும் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்து வந்தான்.

அதே ஊரில் ஒரு மஹாத்மா வாழ்ந்து வந்தார். அவரது கடைசி காலமான, அவர் இந்த பூவுலக வாழ்க்கையை முடித்துக்கொள்ள கூடிய அந்த தருணமும் வந்தது. அந்த தருணத்தில் அவரை ஒரு நிமிடம் பார்த்து விட மாட்டோமா என்று பலர் தவித்தார்கள். ஆனால் அவர் யாரையும் தன்னருகில் அனுமதிக்கவில்லை. அவருடைய பிரியமான சீடர்களை கூட, அவரருகில் வர அவர் அனுமதிக்கவில்லை.

அவருக்கு அடுத்ததாக ஒரு ஞான வாரிசாக ஒருவரை நியமித்துள்ளாரே, அவர் மட்டுமே அவர் அருகில் இருந்து வந்தார். தனஞ்செயன் இவ்வளவு நாட்களில் ஒருநாள் கூட அந்த மஹாத்மாவை பார்ப்பதற்கு வந்ததில்லை. ஆனால் எல்லோரும் கூட்டம் கூட்டமாக அவரை பார்க்க செல்வதை பார்த்தான். ஊரே பரபரப்பாக இருந்தது. அவனுக்கு தானும் போய் அவரை பார்க்க வேண்டும் என்று தோன்றியது. தன் பரிவாரங்களுடன் கிளம்பி அலட்டலாக, ஆடம்பரமுடன், அவரை

> *"தங்களையே கதியென நம்பியிருக்கும் இவ்வளவு பக்தர்கள், தங்களை தரிசனம் செய்ய காத்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களை எல்லாம் விட்டு விட்டு தனஞ்செயனை மட்டும் நீங்கள் பார்க்க அனுமதித்து ஏன்" என்றார்.*

பார்க்க வந்தான். அங்கு காத்திருந்தவர்களோ, நம்மையே நம் குருநாதர் பார்க்கவில்லை; இவரை எங்கு பார்க்க போகின்றார் என்று நினைத்தார்கள்.

ஆனால் அந்த மஹாத்மாவோ, அவரை மட்டும் உள்ளே வர சொல்லி, அவருக்கு தரிசனம் தந்தார். இதைக் கண்ட எல்லோருக்கும் வியப்பு. மேலும் ஒன்றும் புரியவில்லை. குருநாதரின் அருகில் இருந்த அவருடைய ஞான வாரிசு, மெதுவாக குருநாதரை பார்த்து, "தங்களையே கதியென நம்பியிருக்கும் இவ்வளவு பக்தர்கள் தங்களை தரிசனம் செய்ய காத்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களை எல்லாம் விட்டு விட்டு தனஞ்செயனை மட்டும் நீங்கள் பார்க்க அனுமதித்து ஏன்" என்றார். அதற்கு குருநாதர், "நான் எந்த உலகத்திற்கு போகின்றேனோ அங்கு நீங்கள் அனைவரும் என்னை பின்தொடர்ந்து, வரும் நாட்களில், வந்து சேர போகின்றீர்கள். அங்கு நாம் பார்த்து கொள்வோம். ஆனால் நாம் போகப்போகின்ற உலகத்திற்கு அவர் வரவே முடியாது. அதனால்தான் இங்காவது அவரை பார்த்து விடுவோம் என்று பார்த்தேன்" என்றார். மஹான்கள் எல்லாவற்றையும் ஒரு வித்தியாசமான கோணத்தில் பார்ப்பார்கள் என்று, அவர் புரிந்து கொண்டார்.


ஜாதி, மதப்பிரிவுகள், இவற்றில் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. உயர்ந்தவர்களாக இதில் நினைத்துக் கொண்டிருப்பவர்கள் அடுத்தவர்களை விலங்குகளுக்குச் சமமாக பார்க்கின்றனர்; மனிதர்களாக கூட பார்ப்பதில்லை.

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

உடல் உறுப்புகள் எதோ ஒன்று இல்லாமல் பிறப்பது ஊனம் அல்ல. மனதில் தைரியம் இல்லாமல் பிறப்பதும், சந்தேக புத்தியுடன் பிறப்பதும்தான், உண்மையான ஊனம் ஆகும்.

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Limited**

**மே 22 முதல் 25 வரை** – ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் மே 22ம் தேதியன்று **தூத்துக்குடி** நாமத்வாரிலும், மே 23ம் தேதியன்று **அம்பாசமுத்திரம்** கிருஷ்ணன் கோவிலிலும், **விருதுநகர்** ராமர் கோவிலிலும், **கோவில்பட்டி** நாமத்வார் மற்றும் **சிவகாசி** இண்டஸ்டிரீஸ் சாரிட்டீஸ் கல்யாண மண்டபத்திலும், மே 24ம் தேதியன்று **வத்தலகுண்டு** நாமத்வாரிலும், பல சத்சங்கங்களும் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையும் நடைபெற்றது. ஸ்ரீஸ்வாமிஜி அங்குள்ள நாமத்வார் மையங்களுக்கும் சென்றிருந்தார்கள். திரளாக அன்பர்கள் வந்து கலந்து கொண்டு ஸ்ரீஸ்வாமிஜியின் ஆசிகளை பெற்று சென்றனர்.

**மே 28 முதல் 30 வரை கோபகுடீரம்** – சிறார்களுக்கான கோபகுடீரம் கேம்ப் சென்னை திருவான்மியூர் அமரபாரதி கல்யாண மண்டபத்தில் "குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி டிரஸ்ட்" சார்பில் மிக சிறப்பாக நடைபெற்றது. இதில் சுமார் 75குழந்தைகள் கலந்து கொண்டனர். விழா அழகான பூஜையுடன் ஆரம்பித்தது. பின்னர் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் சிஷ்யர் ஸ்ரீராமானுஜம் குழந்தைகளை வரவேற்றும், விழாவின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம் குறித்தும் உரையாற்றினார். குழந்தைகளுக்கு ஸ்தோத்திர பாடல்களும், எளிய நாமாவளிகளும், நட்பாக பழகும் விதமும், பிரார்த்தனையின் அவசியமும், எளிய யோகாசன பயிற்சிகளும் பயிற்றுவிக்கப்பட்டன. கண்ணனின் லீலைகளை நினைவு கூறும் விதமான நிகழ்ச்சிகள் பல இருந்தன. சிறார்கள் மிகவும் இதை ரசித்து அனுபவித்தனர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களும் இதில் கலந்து கொண்டு, சத்சங்கத்தின் அவசியத்தை வலியுறுத்தி அருளுரை வழங்கினார்கள். குழந்தைகளுக்கும் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்த அன்பர்களுக்கும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஆசிகளை வழங்கினார்கள். இதே போன்ற ஒரு நிகழ்ச்சி தூத்துக்குடியிலும் சென்னையில் பல இடங்களிலும் ஜூன் மாதத்தில் குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி இந்தியா சார்பாக நடைபெற்றது. பிரதி வாரமும் சென்னையில் இந்நிகழ்ச்சி பல இடங்களில் நடைபெற்று வருகிறது.

**கூடுவாஞ்சேரி – ஜூன் 11ம் தேதி** கூடுவாஞ்சேரி ஸ்ரீஹனுமார் கோவில் முதலாம்

ஆண்டு கும்பாபிஷேக நிகழ்ச்சியில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டு ஹனுமாரின் மஹிமை குறித்து, அருளுரை வழங்கினார்கள். சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட அனபர்கள் இதில் பங்கேற்று குருவருளும் திருவருளும் பெற்றனர்.

**களப்பாடி (குடியாத்தத்திலிருந்து 7கி.மீ)** - ஜுன் 12ம் தேதி குடியாத்தம் அருகே உள்ள களப்பாடி கிராமத்தில் நடந்த சத்சங்கத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டு அருளுரை வழங்கினார்கள். சுமார் 2000 அன்பர்கள் இதில் பங்கேற்றிருந்தனர். முன்னதாக ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஆம்பூர் அருகே உள்ள ராமாபுரம் ராமர் கோவிலுக்கு சென்று அங்கும் சத்சங்கம் நிகழ்த்தினார்கள்.


**கடலூர், விழுப்புரம் , விக்கிரவாண்டி - மே 24**ம் தேதி கடலூர் மஞ்சக்குப்பத்திலும் **ஜுன் 5**ம் தேதி விழுப்புரம் வைகுந்தவாசர் பெருமாள் கோவிலிலும் **ஜுன் 11**ம் தேதி விக்கிரவாண்டி ஆஞ்சநேயர் கோவிலிலும் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை சத்சங்கங்கள் நடைபெற்றன. இதில் ராமானுஜம்ஜி அவர்கள் மஹாமந்திரத்தின் மூலம் கடவுளை அனைவரும் அணுக வேண்டியதன் அவசியத்தையும், அதன் பெருமையையும், குரு மகிமையையும் எடுத்து பேசினார். இந்நிகழ்ச்சிகளில் கேசவன்ஜி அவர்களும் கலந்துகொண்டு உரையாற்றினார்.

**சென்னை திருவல்லிக்கேணி இந்து மேல்நிலைப்பள்ளியில் - ஜுன் 4ம் தேதி ராமானுஜம்ஜி** "Teachers' Training module - Inner Transformation" என்ற தலைப்பில் ஆசிரியர்கள் முன்னிலையில் மகிழ்ச்சியுடன் பணியாற்றுவது குறித்து உரையாற்றினார். பல ஆசிரியர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது.

**ஜுன் 14** மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் ஸ்ரீகாஞ்சிமஹாஸ்வாமிகளின் ஜெயந்தி மஹோத்ஸவம் மிக விமரிசையாக கொண்டாடப்பட்டது.

**மே-ஜுன்** - குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடியை சேர்ந்த ஸ்ரீபரத் அவர்கள் **ஜெர்மனியின் பல** நகரங்களில் பல தினங்களில், மஹாமந்திர சத்சங்கம் நிகழ்த்தினார்.

"MADHURASMARANAM" -
Divine Life of Sri Sri Muralidhara Swamiji




"My Guru as I See HIM"
By Bhagyaji
(Dr.A.Bhagyanthan) -
(in English)
Live recording at
Namadwaar center,
Malaysia
Jan 29,30 - 2011

A New DVD release by
Chaitanya Mahaprabhu Namabhiksha Kendra
Contact - +91 44 24895875

rb **rajmani builders**

launches its new project

**"rajmani's mathura"**

at kolapakkam (near Porur)

56 well designed and ventilated
2/3 bhk apartments

ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com

http://rajmanibuilders.websitesforever.com

## ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

- ஜனனி

### தன்வந்தீ பாயி - 4

ப்ரேமமாதுரீ பாய், நித்யம் யமுனையில் ஸ்நானம் செய்வார். தனது கைகளாலேயே மாவு பிசைந்து மிகவும் சுசி-ருசியுடன் டாகுருக்கு நிவேதனம் தயாரிப்பார். அவரது குருபாயி (அதே குருவின் சீடர்) மாஸ்டர் மூல்சந்த்ஜீ அவர்களும் ப்ருந்தாவனத்தில் இருந்து கொண்டு பஜனை செய்து வந்தார். அவர் ப்ரேமமாதுரீபாய் அவர்களால் மிகவும் ஈர்க்கப்பட்டார். அவர் பாயிஜீயிடமிருந்து ஸந்யாஸம் பெற விரும்பினார். ஆனால் பணிவே உருவான பாயிஜீ, யாருக்கும் தீக்ஷை அளிக்க தனக்கு தகுதி இல்லை என்று எண்ணி மறுத்து விட்டார். ஆனால் கனவில் ஸ்ரீஸரஸமாதுரீஜி பாயிஜீக்கு ஆக்ஞையிட்டதின் பேரில், அவர் மூல்சந்த்ஜீக்கு ஸந்யாஸம் அளித்தார். அவர் ஸ்ரீமத்சரண்ஜீ என்ற தீக்ஷா நாமம் பெற்றார்.

ஒருமுறை ப்ரேமமாதுரீஜீக்கு, சுகதேவர் ஸாக்ஷாத் தர்சனம் அளித்தார். அவர் ஒருமுறை ஸ்ரீமதீசரண்ஜீ மற்றும் சுக ஸம்ப்ரதாயத்தை சேர்ந்த பல பக்தர்களுடன் சுகதால் எனும் க்ஷேத்ரத்திற்கு சென்றார். இங்குதான் ஸ்ரீசுகர் பரீக்ஷித்திற்கு ஏழு நாட்கள் பாகவதம் கூறினார். ரம்யமான கங்கைக்கரையில் அமைந்திருக்கும் இவ்விடத்தில்தான் ஸ்ரீசுகர், ஸ்ரீச்யாமசரண்தாஸ் மஹாராஜுக்கு தரிசனம் அளித்து தீக்ஷையும் அளித்தார். இங்கு தான் சுகருக்கான ஒரு கோவிலும் சுக-ஸம்ப்ரதாயத்திற்கான குருத்வாராகவும் உள்ளது. அங்கு சுகதேவரின் திருவிக்ரஹத்தை தரிசனம் செய்து விட்டு, பாயிஜீ திரும்பி வரும்பொழுது, அவருக்கும், ஸ்ரீமதிசரண்ஜீக்கும் வழியில் சுகதேவரின் ஸாக்ஷாத்காரம் ஏற்பட்டது. இருவரும் பாவத்தில்(BHAVAM) மூழ்கி, சில விநாடிகள் அங்கேயே ஸ்தம்பித்து நின்றுவிட்டனர். கூட வந்திருந்த மற்ற அனைவரும், இவர்கள் இருவரும் நிற்பதைக் கண்டு திகைத்தனர். அவர்கள் எல்லோருக்கும் எந்த அனுபவமும் ஏற்படவில்லை.

ஸ்ரீமதிசரண்ஜீ தன்னையே பாயிஜீயின் ஸேவையில் முழுவதுமாக

ஈடுபடுத்திக் கொண்டார். அவர் டாகுர்ஜீக்கு சமைப்பார். பாயிஜீ அதை நிவேதனம் செய்வார். இதை அவர் மிகவும் பாவத்துடன் செய்வார். நிவேதனத்தில் ஏதாவது குறைபாடு இருந்தால், அதை அவர் பாவத்திலேயே(BHAVAM) அறிந்து விடுவார். சில சமயம், அவர் ஸ்ரீமதிசரண்தாஸ்ஜீயிடம் இன்று பாயஸத்தில் சர்க்கரை குறைச்சல் என்பார். மற்றொரு சமயம், "இன்று கூட்டில் உப்பு அதிகம். அதனால் ஸ்ரீஜீ எடுத்துக் கொள்ளவில்லை" என்பார். நிவேதனத்திற்கு பின் ப்ரஸாதத்தை சுவைத்து பார்த்தால், அது பாயிஜீ கூறியது போலவே இருக்கும். அவர் ப்ருந்தாவனத்திற்கு வந்தபின், கோபால மந்திரத்தை விதிவத்தாக அனுஷ்டானம் செய்தார். அப்பொழுதிலிருந்து அவருக்கு பாவபக்தி அதிகரித்து, இதுபோன்ற அனுபவங்கள் ஏற்படலாயின.

ஸாதுக்களின் உலகமே ஒரு தனி உலகம். அவர்கள் பரஸ்பரம் தொடர்பு கொள்ள தொலைபேசி போன்ற எந்த ஸாதனங்களையும் எதிர் பார்ப்பதில்லை. அவர்கள் ஒருவரையொருவர் எப்படியும் தெரிந்து கொண்டு சந்தித்து விடுவார்கள். ப்ருந்தாவனத்தில் ஸக்ய பாவத்தில் ஸித்த பக்தரான ஸ்ரீக்வாரியா பாபா, பாயிஜீயைப் பற்றி அறிந்து அவரிடம் வர ஆரம்பித்தார்.

ஒருமுறை ப்ரேமமாதுரீ, பாயிஜீ ஏற்பாடு செய்திருந்த சரத் பூர்ணிமா உத்ஸவத்திற்கு ஸ்ரீக்வாரியா பாபா வந்தார். அச்சமயம் நிவேதனங்கள் டாகுர்ஜீ முன் வைக்கப்பட்டிருந்தன. நிவேதனம் செய்யும் முன்பே பாபா அதிலிருந்து ஒரு லட்டுவை எடுத்து சாப்பிட்டு விட்டு டாகுருக்கு அழகு காண்பித்து விட்டு சென்று விட்டார்.

(தொடரும்)

<u>பிழை திருத்தம்:</u> சென்ற ஜூன் 2011 மதுரமுரளி இதழ் – மதுரமான மஹனீயர் – 183ல் – சாலிவாஹனபுரி பூனாவிலிருந்து மூன்று நூறு கிலோமீட்டர் என படிக்கவும். தட்டச்சு பிழையால், மூன்று கிலோமீட்டர் என்று மட்டும் பிரசுரமாகி இருந்தது.

## *மாலே மணிவண்ணா – 97*

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

தன்மாத்திரை, அறிகருவிகள், அவற்றால் குறிப்பின் உணரும் தொழிற்கருவிகள், தன்மாத்திரை வழித் தோன்றும் பருப்பொருளாகிய பூதங்கள் என்ற நான்கு ஐந்து 20 தத்துவங்களை விளக்கிய பரிபாடல் மேல் உள்ள தத்துவங்களைக் கூறுகிறது.

அதனால்,

*நின் மருங்கின்று மூவேழ் உலகமும்*
*மூலமும் அறனும் முதன்மையின் இகந்த*
*காலமும் விசும்பும் காற்றோடு கனலும்*

ஆதலால், மூலப்பகுதியும், அறமும், எப்பொழுது தோன்றியது என்று முதல் அறியப்பெறாத அநாதியான காலமும், காற்றும் தீயும் கூடிய இந்த மூவேழ் உலகத்து உயிர்கள் எல்லாம் நின்னை விட்டு நீங்காது நின்னிடத்தவாயின. இவற்றுள் மூலப்பகுதி கூறவே மான், அகங்காரம், மனம் என்ற தத்துவங்களும் கூறப்பட்டதாயின.

மூலப்பகுதியாவது சாத்துவிகம், இராஜசம், தாமசம் என்னும் மூன்று குணங்கள் தம்முள் ஒத்த நிலைமையது. ஆதலால் அதனைக் கூறவே அறிவு, அறியாமை; இன்பம், துன்பம்; என்ற உயிர்க் குணங்கள் அடங்கும் இவற்றைக் குறிப்பால் விளக்குவனவே மனமும், முனைப்பு எனப்படும் அகங்காரம் ஆகும். இவையெல்லாவற்றிற்கும் மூலம் மஹான் எனப்படும் தத்துவம். மற்றவை எல்லாம் கூறவே மஹானும் கூறியதாயிற்று.

அறன் கூறவே எதிரிடைமான பாவமும் அடங்கும். மூவேழ் உலகம் என்பது இங்கு உலகத்தைக் குறிப்பிடாமல், உலகில் வாழும் உயிர்களை, இட ஆகுபெயரால் குறித்தது - 24 தத்துவங்களால் பயன் கொள்வது உலகுயிர்கள் ஆதலின்.

இந்த வைணவ தத்துவச் சுரங்கத்தைப் பரிபாடலுக்கு உரை எழுதிய பரிமேலழகரே திருக்குறளுக்கு தாம் எழுதிய உரையில் விளக்கமாக எழுதியுள்ளார். "நீத்தார் பெருமை" என்ற அதிகாரத்தில்,

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின்

வகை தெரிவான் கட்டே உலகு

என்னும் குறளுக்கு, "சுவையும், ஒளியும், ஊறும், ஓசையும், நாற்றமும் என்று சொல்லப்பட்ட தன் மாத்திரைகள் ஐந்தனது கூறுபாட்டையும் ஆராய்வான் கண்ணதே உலகம்" என்று உரை கூறி,

அவற்றின் கூறுபாடாவன, பூதங்கட்கு முதலாகிய அவைதாம் ஐந்தும் (சுவை முதலிய தன்மாத்திரைகள்) அவற்றின் கூறாகிய ஞானேந்திரியங்கள் ஐந்தும் கண்மேந்திரியங்கள் ஐந்துமாக இருபதுமாகும். வகை தெரிவான் கட்டென உடம்பொடு புணர்ந்ததினால் தெரிகின்ற புருடனும், அவன் தெரிதற் கருவியாகிய மான்(மஹான்) அகங்கார மனங்களும் அவற்றிற்கு முதலாகிய மூலப்பகுதியும் பெற்றாம் என்று விளக்கமும் தந்தார்.

இங்கே புருடன் என்றது உயிரை. தத்துவம் 24. உயிர் இருபத்தைந்தாவது தத்துவம். இவ்விருபத்தைந்தும் அல்லது உலகு எனப் பிறிதொன்றில்லை என்பதையும் உணர்த்தினார் உரையாசிரியர்.

பரிபாடற் பகுதியும் திருக்குறள் கருத்தும் ஒன்றை ஒன்று விளக்குதலும் இரண்டிற்கும் பரிமேலழகரே உரை எழுதி இருத்தலானும், திருக்குறள், பரிபாடல் இரண்டும் தோன்றிய கடைச் சங்க காலத்தேயே வைணவ சமய தத்துவக் கோட்பாடுகள், தமிழகத்தில் நன்கு அறியப்பட்டிருந்தமை தெளிவாகிறது.

அதனால், "நின் மருங்கின்று மூவேழ் உலகமும்" என்னும் பரிபாடல் 23வது அடியை, 25வது அடிக்குப் பின்னர் முடிப்பாகக் கூட்டிப் பொருள் செய்க. தத்துவங்கள் 24ஆகவும் நீ இருக்கின்றபடியால் கீழ், நடு, மேல் என்கின்ற மூவேழ் உலகத்து உயிர்களும் உன்னிடத்தே ஆயின; அவை உன்னை விட்டுப் பிரிந்திருப்பன அல்ல என அவனே எல்லாமாக இருப்பதும், அவனுள் எல்லாம் இருப்பதும் சொல்லப் பெற்றன

(தொடரும்)

## அப்பாலுக்கு அப்பால் அல்லமபிரபு –4

அல்லம பிரபு தம் குரு தன்னுடன் பேசவில்லை என்று வருத்தப்பட்டார். ஆனால் அடுத்த கணம் "கால தேசங்களை கடந்து என் குரு சமாதியில் ஆழ்ந்து இருக்கிறார். அவர் தம்மையே அறியவில்லை. பரம்பொருளான சிவத்துடன் ஒன்றி இருக்கிறார். அப்படி இருக்கையில் அவர் என்னை எப்படி அறிவார்? ஆதலால் எந்த ஸ்வரூபம் என் இருதயகமலத்தில் தெளிவாக இப்பொழுது புலப்படுகிறதோ, அதுவே என் குருவின் ஸ்வரூபம்" என்று தெளிந்தார்.

"பேசாத, கேட்காத ஒரு குருவை நான் அடைந்தாலும், அவர் பேசாமலேயே பரவ விட்டிருந்த, ஞான அலை என்னை பக்குவப்படுத்தியது. இரண்டற்ற ஆன்ம நிலையை அனுபவத்தில் உணர்ந்தேன்" என்றும் ஒரு வசனத்தில் பாடுகிறார். பரவசத்துடன் குருவின் பாதங்களை பணிந்தார். அவர் "எனக்கும் என் குருவிற்கும் எந்த ஒரு உறவு முறையும் இல்லை; ஆனால் இது போன்ற நெருக்கமான உறவு எனக்கு யாருடனும் இருப்பதாகவும் தெரியவில்லை" என்கிறார். அவர் தம் குருவின் கையில் இருந்த லிங்கத்தை தொட்டார். அதை தமது கைகளில் எடுத்து பார்த்தார்.

அந்த கணம் அனிமிச தேவரின் உடலில் இருந்து பிராணன் பிரிந்தது. அல்லமர் வருத்தமடைந்தார். "என் குருவின் பிராணன் லிங்கத்தில் இருந்திருக்கிறது. அது அறியாமல் அதை எடுத்தேன். அவர் பிராணனை விட்டார். மாபாதகம் செய்தேனே" என்று வருத்தப்பட்டார். ஆனால் லிங்கத்தில் இருந்த குருவின் பிராணன், அல்லமரின் உடலில் பிரவேசித்தது. அது அவர் மனம் முழுவதும் ஆக்கிரமித்தது.

அப்பொழுது அல்லமர் நினைத்தார் "அட! இது மடமையே! உயிர் பறந்தது; சென்றது; எல்லாம் மனதின் மாயை. புறக்கண்களுக்கு புலப்படாத என் குரு மாற்றமற்றவர். பிறப்பற்ற அவர் எப்பொழுது பிறந்தார்?" என்று தன் குருவின் நிஜ நிலையை நினைத்து ஆறுதலடைந்தார். (அல்லமர் ஞான ஸ்வரூபத்தை அனுபவத்தில் பெற்று இருந்ததால்தான் இது சாத்தியமாயிற்று). அல்லமபிரபுவிடம் அனிமிசயோகியானவர் தமது விழி நோக்காலேயே தமது அனைத்து

சான்னித்யத்தையும் செலுத்தினார் என்பரும் உண்டு.

குருவின் மேல் ஏற்பட்ட பக்தி அல்லமருக்கு குறையவே இல்லை. மாறாக அது விருத்தியானது.

*குருவை என் ஹ்ருதயத்தாமரையில் வைத்து வணங்கினேன்*
*குஹேஸ்வர லிங்கத்தில் அவர் மகிமையை உணர்ந்தேன்*
*என் முற்பிறப்புக்களின் சுவடுகள் பறந்தோடினவே!* என்று பாடுகிறார்
*குருவை தரிசிக்க சென்றேன்*
*குருவோ பேதம் முழுவதையும் அறுத்து விட்டார்*
*அவரே சீடர் அவரே குரு அவரே லிங்கம்*
*குஹேஸ்வர லிங்கம் என் மேல் பட்டவுடன் மனது மறைந்ததே!* என்றும் பாடுகிறார். அல்லமருக்கு தன் குரு தன்னுடன் இரண்டற கலந்து விட்டார் என்பதில் நிச்சயம் ஏற்பட்டது. குருவிற்கு லிங்கத்தின் மேல் என்ன பாவம் (BHAVAM) இருந்ததோ அது இப்பொழுது அல்லமரிடமும் வெளிப்பட்டது.

அவருக்கு தன் கையில் உள்ள லிங்கம் மேல் பிரேமை பொங்கியது! "மாமரத்திற்கும் குயிலுக்கும் என்ன உறவு? ஒன்றும் இல்லையே? இரண்டின் ஜாதியும் வேறு; ஆனால் அவை இணையவில்லையா? குன்றில் வளரும் நெல்லிக்காயும் கடல் உப்பும் இணைகின்றனவே? (நாம்தான் உபயோகப்படுத்துகிறோம்) அவைகளுக்கு என்ன உறவு! அதுபோல்தான் எனக்கும் குஹேஸ்வர லிங்கத்திற்கும் என்ன உறவு? உறவு என்று பார்த்தால் ஒன்றும் இல்லை; ஆனால் நாங்கள் (லிங்கமும் தானும்) ஒன்றானோம்" என்கிறார்.

மேலும் தன் கைகளில் இருக்கும் லிங்கத்தை பார்த்து "குஹேஸ்வரா! உருவற்ற நீ உருக்கொண்டு இப்படி வந்துள்ளாய்! உன்னை பற்றி எப்படி பேசுவது? உன்னை பார்க்கும் ஆசை என்னுள் இருக்கும் வரை நான் எப்படி உன்னுடன் இணைவது? ஆனால் நான் உன்னுடன் இணையவேண்டும் எனும் ஆசை உள்ள வரையில், உன்னைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை எனக்குத் தீராது. எந்த புன்முறுவலோ சிரிப்போ, உன்னை பார்த்து, உன்னுடன் இணையும் ஆனந்தத்தை சொல்லத்தகுமோ? " என்கிறார்.

அல்லமர் செய்த சிவலிங்க தியானத்தால் அவருக்கு லிங்கம், உடல்,

மனம் என்ற மூன்றும் அடிபட்டு மூன்றும் ஒன்றாய் போனது. குருவின் அருளால், அல்லமருக்கு மூன்று வித கர்ம மலங்களும் நீங்கின. அல்லமர் அனிமிச யோகீஸ்வரரை சந்தித்தபின்தான், அவரது அவதார காரியம் ஆரம்பமாகியது. குருவின் அருகில் இருக்கையிலேயும், ஸ்பரிச தீக்ஷையின்றி, குருவின் ஸான்னித்ய விசேஷத்தினால், அல்லமருக்கு ஞானம் அருளப்பட்டது என்று இச்சம்பவத்தை கொண்டாடுகின்றனர்.

(தொடரும்)

சனாதனப் புதிர் - பகுதி - 29

( விடைகள் அடுத்த இதழில்)

–ஆத்ரேயன்

1. இந்த ஒன்றுதான் நன்மை பயக்கும்; இந்த ஒன்றுதான் அமைதியை கொடுக்கும்; இந்த ஒன்றுதான் திருப்தியை அளிக்கும்; இந்த ஒன்றுதான் சுகத்தை கொடுக்கும். அந்த ஒன்று எது?
2. இந்த இரண்டு மனிதர்கள் ஸ்வர்கத்தை விட மேலாக கருதப்படுகிறார்கள். அந்த இருவர் யார்?
3. இந்த மூன்றையும் விட்டு விட வேண்டும். அவை ஒதுக்கப்பட வேண்டியவை. அந்த மூன்று எது?
4. இந்த நான்கும் உடனே பலிக்கின்றன. அந்த நான்கு எவை?
5. இந்த ஐவரும் மனிதனால் பணிவிடை செய்யப்படதக்கவர்கள். இந்த ஐவர் யார்?

சனாதனப் புதிர் : பகுதி – 28 விடைகள் –ஆத்ரேயன்

1. அருணை - வாமகேச்வர தந்த்ரம் - சௌந்தர்ய லஹரி 16வது ஸ்லோகம்.
2. பாஸ்கர ராயர் - ஹாலாஸ்ய மாஹாத்மியம்.
3. பாகவதம் 4வது ஸ்கந்தம் பக்தியில்லாமலும் , யத்ருச்சையாகவும் , மனம் லயிக்காமலும் , லௌகீக விஷயங்களை பேசிக்கொண்டு இருக்கும் பொழுது "சிவ" என்ற அக்ஷரங்களைச் சொன்னால் மஹா மஹிமை உண்டு.
4. ஜீவன் முக்திபுரி ; ஹாலாஸ்ய க்ஷேத்திரம்.

**சைதன்ய மஹாப்ரபு நாம பிக்ஷா கேந்திராவின் புதிய வெளியீடு "நினைவில் நிறுத்து" – மஹான்களின் வாழ்வில் நடந்த , வாழ்வில் நினைவில் கொள்ள வேண்டிய அரிய சம்பவங்கள்**

**By**

**ஸ்ரீ எம்.கே. ராமானுஜம்ஜி**




மதுரமுரளி சந்தாதாரர் ஆக விரும்புகிறவர்கள் Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 என்ற முகவரிக்கு ரூ120/-ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை / டி.டி. / மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டு கொள்கிறோம். ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் விவரங்களுக்கு அணுகவும்: PH: +91-44-24895875

Madhuramurali

- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.
- Advertisements in Madhuramurali are invited.

## ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஜுலை2 - 8 | ஸ்ரீயோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமம் திருவண்ணாமலை |
| ஏகாதசி | ஜுலை 11, 26, ஆகஸ்டு 9, 25 |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை

Dr.A.BHAGYANATHAN, Personal Secretary

to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.

Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.